**தலைப்பு - 217 நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 அபிப்பிராயம்

நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

## 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 **நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

------------------------------------------------------------------------------------------------------------

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4 **நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

-------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்;

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு தொடர்புடையதாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள |
| --- | --- | --- |
| 4 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அம் மிகை நிதியேற்பாடு 18 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | 2020 ஆம் ஆண்டில் கொவிட் தொற்று நிலையினை முழு உலகமும் முகம் கொடுத்த பின்னணியில் 2021 ஆம் ஆண்டில் அத்தொற்று நிலைமை அகன்று சாதாரண பிரகாரம் நிறுவன நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியுமென்ற எதிர்பார்ப்பில் 2021 ஆம் ஆண்டின் பாதீடு தயாரிக்கப்பட்டது. | மதிப்பீடு யதார்த்தமான தயாரிக்கப்படுவ-தற்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடன்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள |
| --- | --- | --- |
| திறைச்சேரி கணினி அச்சு குறிப்புக்களில் உள்ளடக்கப்பட்ட 03 செலவின விடயங்களுக்குரிய ரூபா 401,953 ஆன பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியேற்பாட்டினை மிகைத்து பொறுப்புக்களுக்கு உட்படல் நேர்ந்திருந்தது. | பொறுப்புக்கள் பற்றிய கூற்றில் அனைத்து பொறுப்புக்களும் சரியாக உள்ளடக்கப்படுதல் வேணடும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

| அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** | | |
| 2018 சனவரி 24 திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | மனிதவள அபிவிருத்தி திட்டம் சுற்றறிக்கை பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்க-வில்லை. | மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள |
|---|---|---|
| தேசிய கொள்கைகள் மற்றும் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக அனாதை, கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற சிறுவர்களும் சட்டரீதியான பிரச்சனைகளுக்கு | மாற்று பராமரிப்பு கொள்கை செயற்படுத்தும் 08 மாகாண செயல்நடவடிக்கை திட்டங்கள் தயாரிக்கப்பட்டது. கேகாலை, | தொலைநோக்கிற்கு அமைவாக செயற்படுவதற்காக தேசிய கொள்கையை |

| | | |
|---|---|---|
| முகங்கொடுக்கின்ற சிறுவர்களையும் விசேடமாகக் கொண்டு அனைத்து சிறுவர்களினதும் உரிமைகளை பாதுகாத்து அவர்களுக்கு சமமான சந்தர்ப்பமொன்று உருவாக்கிக் கொடுத்தல் திணைக்களத்தின் தொலைநோக்காக காணப்பட்ட போதிலும், திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட 1956 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் 65 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், சிறுவர்களின் உரிமை பாதுகாக்கப்படும் வகையில் உலகளாவிய சட்டத்திற்கு அமைவாக தேசிய கொள்கையொன்று தயாரித்தல் மற்றும் அதற்குரிய சட்டங்கள் வகுத்தல் இது வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மாற்று பராமரிப்பு கொள்கையொன்றிற்காக 2019 மார்ச் 06 ஆந் திகதி கெபினட் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், அக் கொள்கை 2022 மார்ச் 25 கணக்காய்வு திகதி வரையிலும் பொருண்மையாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இரத்தினபுரி மாவட்டகங்களின் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் சேர்ந்து சபரகமுவ மாகாண செயல் நடவடிக்கைத் திட்டம் இன்னுமாக மேம்படுத்தப்பட்டதுடன் எதிர்காலத்தில் ஏனைய மகாகாணங்களின் செயல்நடவடிக்கைத் திட்டம் திட்டமிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நிலவிய கொவிட் 19 தொற்று நிலையினுள் போக்குவரத்து தடைகளினால் வேலைத் திட்டங்கள் நடத்துவதற்காக கட்டுப்பாடுகள் காணப்பட்டமையும் இது தாமதித்தமைக்கு காரணமாகியது. | செயற்படுத்தல் வேண்டும். |

## 3.2 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள |
|---|---|---|---|
| (அ) | ஆபத்திலுள்ள சிறுவர்களுக்காக பாதுகாப்பு திட்டங்கள் செயற்படுத்துவதற்காக மீளாய்வாண்டினுள் 400 சிறுவர்களுக்கா ரூபா 11,670,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. செயன்முன்னேற்ற அறிக்கை | திட்டமிட்டவைகளை பார்க்கிலும் களத்திலிருந்து பெறப்படுகின்ற கோரிக்கைகளுக்கு உரிய தேவை அடிப்படையில் பாதுகாப்பு திட்டமிடல் எண்ணிக்கை வேறுபடுவதற்கு நேரிடுகின்றமை தடுக்க முடியாத விடயமாகும். | திணைக்களத்தின் பிரதான நோக்கங்கள் அடையப்படுவதற்கு பிரதான பணிப்பொறுப்புக்கள் போதுமான வகையில் செயற்படுத்தப்படல் வேண்டும். |

பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 11,447,000 செலவிடப்பட்டு 374 சிறுவர்களுக்காக மட்டும் இந்த திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. பாதுகாப்பு திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகள் முறையே ஆவணப்படுத்தப்படாதிருத்தல், பாதுகாப்பு திட்டத்திற்காக சிறுவர்களை தெரிவு செய்யும் குறிப்பிட்ட முறைமையொன்று தயாரிக்கப்பட்டிராமை, பிரதேச செயலாளர் அலுவலங்களுக்கு அனுப்பப்படுகின்ற நிதியேற்பாடுகள் உரிய காலத்தினுள் உரிய பணிக்காக பயன்படுத்தப்படுகின்றதா என்று உறுதி செய்யப்படாமை, பின்னூட்டல் செயன்முறை இல்லாமை போன்ற குறைப்பாடுகள் இது தொடர்பில் அவதானிக்கப்பட்டது.

**(ஆ)** திணைக்களத்தினால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகள் வெற்றி பெற செய்வதற்காக கெபகரு தெகுரு பெயரில் புலமைபரிசில் உதவி வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்படுகின்றதுடன், மீளாய்வாண்டினுள் இதற்காக ரூபா 16,724,400 செலவிடப்பட்டிருந்தது. உதவி பெற்றுக் கொடுக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களின் உயர்ந்தபட்ச வயது, ஒரு பிள்ளைக்கு உரித்தாகும்

இந்த உதவி பெற்றுக் கொடுத்தல் தொடர்பாக உள்ளக சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதுடன் அச் சுற்றறிக்கை தொடர்பாக அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக விசேட சந்தர்ப்பங்களில் பணிப்பாளர் அங்கீகாரத்தின் அடிப்படையில் தேவையான திருத்தங்கள்/வேறுபாடுகள் மேற்கொள்ளப்படும்.

மாகாண நன்னடத்தை திணைக்களத்திற்கு பணம் அனுப்பும் போது மதிப்பீடுகளின் துல்லியம் தொடர்பாக போதுமான கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன், பின்னூட்டல் நடவடிக்கைகள் போதுமான பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | முழுமையான தவணை அளவு, உதவி உரித்தாகும் கல்விசார் மற்றும் தொழில்சார் பாடநெறி எவையென இந்த புலமைபரிசில் உதவி பெற்றுக் கொடுக்கும் போது குறிப்பாக அடையாளப்படுத்திக் கொண்டிருக்கவில்லை. | | |
| **(இ)** | வெவ்வேறு பொருளாதார அல்லது சமூக காரணிகளை அடிப்படையாகக் கொண்டு தொடர்ச்சியான பாடசாலை கல்வியில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பம் பெறப்படாத சிறுவர்கள் மீண்டும் படசாலை கல்வி வழங்குவதற்கான தேவையினை அடையாளப்பத்தி வேலைத் திட்டங்கள் செயற்படுத்துவதற்கு நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவ் வேலைத் திட்டங்கள் போதுமானதாக இல்லாமையினால் 2021 ஆம் ஆண்டில் 2718 சிறுவர்கள் பாடசாலையை விட்டுச் சென்றிருந்தனர். | சிறுவர்கள் பாடசாலையை விட்டுச் செல்வதற்கு திணைக்கள வேலைத் திட்டங்களின் செயற்படுத்தன்மை போதுமானதாக இல்லாமை காரணியாக எவ்வாறு அடையாளப்படுத்துவது என்பது தெளிவாகவில்லை. | குறித்த நோக்கங்கள் நிறைவேற்றிக் கொள்வதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| **(ஈ)** | திணைக்கள அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்குரிய பிரதேச செயலாளர் அலுவலகங்களில் இணைக்கப்பட்டுள்ள சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களினால் சிறுவர்களின் சிறுவர் உரிமைகள் சமூகத்தினுள் உறுதி செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவும், சிறுவர்கள் வெவ்வேறு துஷ்பிரயோகங்களுக்கு | மீளாய்வு மேற்கொள்ளக்கூடிய விசேட முறையொன்று அல்லது ஊக்குவிப்பு கொடுப்பனவு பெற்றுக் கொடுக்கும் திறன் அரசாங்க சேவையினுள் இல்லை. | திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகள் மேற்பார்வை மற்றும் மீளாய்விற்கு உட்படுத்தல் வேண்டும். |

உள்ளாகும் காரணிகளை அடையாளப்படுத்திக் கொண்டு அந் நிலைமையிலிருந்து சிறுவர்கள் பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். அவ்வாறாயினும் அவ் உத்தியோகத்தர்கள் நிறைவேற்றியுள்ள பணிப் பொறுப்புக்கள் தொடர்பாக திணைக்களத்தினால் மேற்பார்வை மற்றும் மீளாய்வு செய்யப்படுகின்றமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்படவில்லை.

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள |
|---|---|---|---|
| (அ) | கொரகான, கல்கடுவ வீதியில் அமைந்துள்ள திணைக்களத்திற்கு சொந்தமானசில கட்டிடங்கள் பல வருடங்களாக பயன்படுத்தாது விளைவற்று காணப்பட்டது. | கொரகான கல்கடுவயில் அமைந்துள்ள திணைக்களத்திற்கு சொந்தமான கட்டிடம் நாட்டில் காணப்பட்ட முக்கிய தேவையின் பிரகாரம் கொரோன சிகிச்சைமத்திய நிலையமாக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு மேற்கொண்ட கோரிக்கைக்கு அமைவாக பெற்றுக் கொடுக்கப்பட்டது. | பதில் ஏற்றுக் கொள்ளப்பட முடியாது. குறித்த கட்டிடங்கள் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள |
|---|---|---|
| திணைக்களத்தினால் 2030 நிலைப்பேறான அபிவிருத்தி இலக்கினை அடையாளப்படுத்தி அவ் இலக்குகள், அடிப்படை தரவு, இலக்குகள் அடையப்பட வேண்டி மைல்கற்கள் போன்று செயன்முன்னேற்றம் அளவிடுவதற்காக குறிக்காட்டிகள் அடையாப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிலைப்பேறான அபிவிருத்தி இலக்கு செயற்படுத்துவதற்காக நிறுவனத்தின் பணிப்பொறுப்புடன் தொடர்புக் கொள்ளும் ஊக்கமுள்ள தரப்பினர் அடையாளப்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிலைப்பேறான அபிவிருத்தி இலக்கு தேசிய மட்டத்தின் உத்தி முகாமைத்துவ திட்டத்திற்கு அமைவாக, நிறுவன ரீதியாக, மாகாண மற்றும் தேசிய மட்டத்தில் அடைந்துக் கொள்வதற்காக தொடர்பாடல் மேற்கொள்வதற்கு சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் இருவர் பெயரிடப்பட்டு எந்த நிறுவனத்திற்கு அனுப்பப்படல் வேண்டுமென்று, போன்றன தொடர்பாக இந்த திணைக்களத்திற்கு தெரிவிக்கப்படவில்லை. | நிலைப்பேறான அபிவிருத்தி இலக்கு செயற்படுத்துவ-தற்காக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள |
|---|---|---|
| திணைக்களத்தின் ஆணையாளர் பதவி 2020 திசெம்பர் 23 ஆம் திகதி தொடக்கம் வெற்றிடமாக காணப்பட்டதுடன் சட்ட உத்தியோகத்தர் பதவி 2014 ஆகஸ்ட் தொடக்கம் வெற்றிடமாக காணப்பட்டது. | ஆணையாளர் பதவிக்கு நிரந்தர உத்தியோகத்தரொருவர் நியமித்து தருமாறு கோரப்பட்டுள்ளது. சட்ட உத்தியோகத்தர் பதவிக்காக நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டதுடன் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் பிரதான இலக்கு நிறைவேற்றிக் கொள்வதற்காக அத்தியாவசியமாகிய சிரேஷ்ட மட்டத்தின் பதவிகளின் வெற்றிடங்கள் நிரப்பபடல் வேண்டும். |